உம்மை நினைக்கும் போதெல்லாம்
நெஞ்சம் மகிழுதையா நன்றி பெருகுதையா..

நன்றி நன்றி ராஜா
நன்றி இயேசு ராஜா

1 தள்ளப்பட்ட கல் நான்
எடுத்து நிறுத்தினீரே
உண்மை உள்ளவன் என்று கருதி
ஊழியம் தந்தீரையா...

2 பாலை நிலத்தில் கிடந்தேன்
தேடி கண்டு பிடித்தீர்...
கண்ணின் மணிபோல காத்து வந்தீர்
கழுகு போல் சுமக்கின்றீர்

3 பேரன்பினாலே என்னை
இழுத்துக் கொண்டீர்
பிரிந்திடாமலே அணைத்துக்
கொண்டீர் - உம்
பிள்ளையாய் தெரிந்து கொண்டீர்

4 இரவும் பகலும் கூட
இருந்து நடத்துகின்றீர்
கலங்கும் நேரமெல்லாம்
கரம் நீட்டி - என்
கண்ணீர் துடைக்கின்றீர்